# தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் கஅசுரு(ஆம்) நவம்பர்மீ எஉ. [இல. எ.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஶிவமத்வைதம், தமேதா யுக்தாத்மாநம் தஸ்மிந்ப்ரீதிஸ்தஸ்ய ப்ரியகார்யஸாதநஞ்ச, தது பாஸநமேவ.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## அட்டவணை.

### விஷயங்கள்.



| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| க. கடவுள்துதி | கசக | ரு. உபநிஷத்து | கருசு |
| உ. விளம்பரங்கள் | கரு௦ | சு. நிருபங்கள் | கருசு |
| ங. தத்துவபோதினி | கருக | எ. சந்தாதாரர்அட்டவணை. | கசுசு |
| ச. பகவத்கீதை | கருச | | |



### சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி,

### கடவுள்துதி.

முகாரிராகம் அடதாளசாப்பு.

பல்லவி.

அறிவுதந்து - அடிபேற்குபிரமா - அபயந்தருவாயாக,

அனுபல்லவி.

பொறிகளனைத்தும் - நெறியிலேநிற்க
அறியாவென்றன் - மறங்களொழிய............(அறிவு,)

சரணங்கள்.

க. அன்புடனேநீ - முன்பாயனுப்பும்
துன்பத்திரயங்கள் - என்பவையெல்லாம்
பின்புகுறைவற்ற - இன்பமேயாகும்,

அன்புள்ளதாயே!

உன்றனமைப்பினில் - ஒன்றுங்குறைவில்லை
என்றனியற்கையின் - குன்றுக்கொடுமையாலே
நன்றுந்தீமையாக - என்றும்முடிவதைநான்
நன்றாயறிந்துகொண்டு - நின்றுபணிசெய்ய....(அறிவு.)

உ. உந்தனருளாலே-வந்தமஹிமையை
எந்தன் முயற்சியே-தந்ததென்றெண்ணாது
சந்ததமுனக்கே-வந்தனங்கள்செய்து

தந்தையேயுந்தன்

திருக்கைதந்த செல்வப்-பெருக்காலடியேன்
செருக்கடையாமலே-உருக்கத்துடனேயது
இருக்கும்வரையிலிந்து-சுருக்கிலுன்றனடிகள்
பெருக்குங்கருணைதனில்-அருக்கல்விட்டுமுழுக. (அறிவு)

ங. அங்கமவயவம்-எங்குமில்லாமலே
கங்குகரையற்ற-மங்களத்தாரைகள்
எங்கும்ஒருங்கவே-பொங்கத்தழைக்கின்ற

துங்கமாம்பொருளே!

பித்தனுமென்றன்-சித்தமொருக்காலும்
வித்தமேயெங்கட்கு-நித்தமென்றெண்ணாமல்
சுத்தமிகுமுன்றன்-உத்தமப்பேறையே
யுத்தமெனநம்பி-வித்தகனாகவே...............(அறிவு.)


## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய பி. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.......................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சே

ர்த்து வருஷம் ஒன்றுக்கு
ரூபாய்........ ...... .........க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாரும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்ருய் பயிண்டுசெய்தது,.......... 0 - அ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது.... .. 0 - எ - 0

கஅகூச ஹூ மேமாசம் முதல் கஅகூரு ஹூ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது...... கூ - 0 - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அநுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே உ0உ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமேயாகிலும், வியக்தி தூஷணங்களை யடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள்முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

## தத்துவபோதினி.

**சோதரர்களே!** கடந்தபத்திரிகையில் விவாஹமானது ஆநுனிகவியவஸ்தையென்று பிரமாணத்தால் நிரூபித்துக் காட்டினோமல்லவா. பிரகிருதத்திலுள்ள விவாஹ பத்ததிமாத்திரம் கேவலம் சங்கேதமென் றேற்பட்டபோதிலும் விவாஹமென்பது கடவுளாலே கருதப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஒருவித மில்லாவிட்டால் மற்றொருவித விவாஹம் நடந்தேறிவந்ததே ஈசுவரன்அமைப்பென்

பதற்கு ஒருபிரபலமான நிதர்சனமாகும். அன்றியும் கடவுளானவர் சகலவித உயிர்களையும் ஒரேஜாதியாய்ப்படைக்காமல் ஆண் பெண்களென்று இருவகையாக்கி அவற்றுள் ஒன்றுடனொன்றுபுணர்ந்தாலன்றி சந்ததிவிருத்தியாகத் தக்கதில்லையென்று அமைத்திருக்கின்றமையாலும், அவர்படைத்த பூதங்கள்நிலைத்து விருத்தியாய் வாழவேண்டுமென்பதே அவருடைய உத்தேசியங்களில் பிரதானமானதாலும், ஏதாவதொரு விதவிவாஹம் நடந்தேறிவரவேண்டுமென்பதுஅவர்கருத்தாக விருக்கிறது. ஆனால் ஜனவிருத்தி யாவதே அவர்கருத்தாகில் ஆதியி லிருந்தவாறே ஆணும் பெண்ணும் பசுப்பிராயமாய் இஷ்டமுள்ளபோது இஷ்டமுள்ளவருடன் புணர்ந்து கொண்டிருந்தால் போதுமேயென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆகிலும் கடவுளின் கருத்தானது ஜனங்கள் கேவலம் உற்பத்தியாகவேண்டியது மாத்திரமேயன்றி அவை விருத்தியாகி நிலைக்க வேண்டியதில்லையென்னும் பக்ஷத்தில் அவ்வாறு நடப்பது போதுமென்றே ஒப்புக்கொள்ளலாம். ஆனால் ஸ்திரீபுமான்கள் இஷ்டமுள்ளபடி சஞ்சரிக்கும் பக்ஷத்தில் பிரஜைகளின் தாய் இன்னாளென்று விளங்கின போதிலும்தந்தை இன்னானென்று உறுதியாய்ச் சொல்லக் கூடுமோ? தினமொருவனுடன் சஞ்சரிப்பவன் பெறும்பிள்ளைக்கு பிதா இன்னானென்று எப்படியறியக்கூடும்? தன்மகனென்று தெரியாதவரையில் ஒருவன்அக்குழந்தை யிடத்தில் அன்புபாராட்டவாவது ரக்ஷணையை வஹிக்கவாவது கூடுமோ? இன்னிலைமையில் ஒருநாழியாவது உலகம் நிலைக்குமோ? ஆனால் இத்தன்மையான ஏற்பாடு உலகத்திற் கிடையாதாவென்றாலோ, இதில் ஏகதேசம் மலையாளத்தில் காண்கிறோம். அவ்விடத்தில் சகல சுவத்துவமும் பெண்களுதாயும் புருஷர் அவர்களுக்கு ஊழியப்பிராயராயு மிருப்பதின் உத்தேசியத்தைச் சற்று மனதிற்கொள்வோமாயின் அவ்வேற்பாடு பிரஜைகளின் சம்ரக்ஷணார்த்தமாகவே செய்யப்பட்டதாகவிளங்கும். அவ்விடத்தில் தாயக்கிரமமும் பெண்வழியையனுசரித்தே. “அம்மான்சொத்துக்கு மருமகன்கருத்தா” என்கிறபழமொழி அத்தேசத்தைப் பற்றியதேயென்று கொள்ளலாம். அவ்விடத்திலும் முற்றும் பசுப்பிராயமாக ஒருவருமிருக்கவில்லை. ஏனெனில் அவ்வித சஞ்சாரத்தில் அசிகிச்சிதமான அளவற்ற நோயுண்டாகி உருவும்வலுமையுங் குன்றிய சந்ததிகள் முதலிலுண்டானபோதிலும் அந்தச்சந்ததிகளாவது அல்லது அவர்களுடைய சந்ததிகளாவதுபிரஜாவிருத்திக்கு அயோக்கியர்களாய் க்ஷயித்து உலகம் முழுகிப்போமென்பதற்கு திருஷ்டாந்தத்தைக்காண வெகுசிரமப்பட வேண்டியதில்லை. நெருங்கின உறவின்மாருடனே மேன்மேலும் கொண்டுகொடுக்கும் குடும்பங்களில் சந்ததிவிருத்தியின்றி சுவீகாரத்தாலே ஒட்டுவழி ஏற்பட்டுவருவதை யறியாதவர் வெகுசிலர். இதுபற்றித்தான் விவாஹத்திற்குக் கூடியமுறைகளின்னவையென்றும் கூடாதன இன்னவையென்றுங் வியவஸ்தைகள் செய்யப்பட்டன. சாதாரணமாய்தகப்பன்வழியில் ஆறு தலைமுறைவரையிலும் தாய்வழியில்நாலுதலைமுறைவரையிலும் பிராமணரில்சகோத்திரமும் விவாஹத்துக் கடுக்காத முறைகளென்று விலக்கினார்கள். இதற்கு ஹேதுவில்லாமற்போகவில்லை. ஒரேநிலத்தில் ஒரேவிரையையிட்டுவருவதால் சுவல்பகாலத்தில்பயன்குன்றிப் போவதுபோலவே ஒரேகுடியில் கொண்டுகொடுத்து வருவதினால் வம்சம் க்ஷயித்துப்போகிறதென்று மனுஸ்மிருதி கூ-வது அத்தியாயத்தில் விதித்திருக்கிறது. ஆதியில் இந்தவியவஸ்தைகளையன்றி நடந்துவந்ததாய் யேற்படுகிறதே, அப்போது இந்தஆக்ஷேபங்களுக் கிடமில்லையோவென்று சிலர் கேட்கலாம். ஆதியில் பயிர்முதலிய தொழில்களேற்பட்டு சுவத்துவம் உண்டானதற்குமுன் வெகுவிஸ்தாரப் பிரதேசத்தில் அதிசுவல்பஜனங்களிருந்திருக்க வேண்டுமாகையாலும், அவர்கள் தங்கள் ஜீவனத்தின் பொருட்டு வெகுதூரம் சஞ்சரிக்க வேண்டியிருந்தமையாலும், வயிறு நிறைப்பதையே கடினமாய்க் கொண்டிருந்த அவர்களுடையமனம் இதரவிஷயங்களை நாடுவது வெகு

அருமை யாகையாலும், விஷயாந்தரங்களில் மனஞ்சென்றபோதும் அவர்கள் தங்களருகிலுள்ள பெண்களைக் கூடியிருப்பார்களேயன்றி அதற்காக தூரதேசஞ்சென்றிருக்க மாட்டார்க ளாகையாலும், அக்காலத்தில் இந்த வியவஸ்தையில்லாவிடிலும் இந்தவியவஸ்தையின் பயன்மாத்திரம் கைக்கூடி வந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஆனால் விவாகமென்பது மனிதராலேற்பட்ட சங்கேத மெனும்பக்ஷத்தில் விவாகநியமத்தைக் கடப்பதினால் விளையும் தோஷம்கேவலம்லவுகிகமாயிருக்கவேண்டுமேயன்றி மறுமையிலும் நம்மைத்தொடர்ந்து வரமாட்டாதேயென்று சிலர்கேட்கலாம். விவாஹநியமங்களைக் கடப்பதினால்வரும் தோஷங்க ளிருவகையனவாம். விவாஹசங்கேதங்களைக்கடப்பது ஒருவகையும், அதினுடைய மூலதர்மத்தைக் கடப்பது ஒருவகையுமாம். பிராம்ம, தெய்வ, ஆர்ஷ, பிராஜாபத்திய, காந்தர்வ, ஆஸுர, ராக்ஷஸ, பைசாசங்களென்று பெரியோர் விவாகத்தை யெண்வகையாக்கி அவற்றில் ஒன்றுக்கொன்றுதாரதம்மியத்தை விளக்கும் சடங்குகளையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவ்வேற்பாட்டினால் இந்த எண்வகையில் ஒன்றையாவது நாமவலம்பிக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்தாகுமேயன்றி அவ்வெட்டையுமாவது அவற்றுள் ஏதேனும் ஒன்றையேயாவது அனுஷ்டிக்க வேண்டுமென்பதல்ல. இதினால் அவரவருக்கு இஷ்டமாயும் உசிதமாயுமுள்ள வகையையனுசரிக்கலாமென்று ஏற்படுகிற படியால், இந்தவிதியே கேவலம் ஐச்சிகமானதாயிற்று. ஐச்சிககர்மங்களை விடுவதினால் சாதாரணமாய் ஏதேனும் லவுகிகபாதகங்கள் உண்டாகலாமாகிலும் நமதான்மாவைத் தொடர்ந்து வரத்தக்க பாபங்களொன்றும் விளையமாட்டாது. ஆனால் உலகத்தில் ஜாரத்துவமென்கிற தோஷத்திற்கே இடமில்லாமற் போகலாமே யென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இஷ்டமானவர்களுடன் புணர்வதிலேயே தோஷமிருப்பதாய்த் தோன்றவில்லை. விவாஹகாலத்தில் யாவஜ்ஜீவம் பிறரை நினைக்காமல் பதிவிருதாளாயிருப்பதாய் வதூவரர்கள் பிரமாணஞ் செய்துகொள்ளுகின்றமையால் அதைக்கடந்து அபசத்தியம் செய்வதுமாத்திரம் தோஷமாகுமேயன்றி வேறுவிதத்தில் தோஷமுண்டாகு மென்று விளங்கவில்லை. ஆனால் இதற்கு ஜாரத்துவமென்கிற பேரையென்வைக்க வேண்டுமென்றாலோ, சற்றுயோசித்துப் பார்ப்பவருக்கு உலகத்திலுள்ள தோஷங்களில் பெரும்பான்மையும் சத்திய பங்கத்தையே மூலமாகவுடையதாகிலும் அதனின் ஸ்தானத்தை யோசித்து ஜாரம், சோரம், பிசுனம், முதலிய அனேகசிறப்புப் பெயர்களுண்டாயிருக்கின்றன வென்றும் தானாய்விளங்கும். ஆனால விவாஹவிருதத்தைச் செய்து கொள்ளாதவர் தங்களிஷ்டப்படி சஞ்சரிக்கலாமா வென்றாலோ இதற்கு நாங்கள் விடையுரைக்க வேண்டிய ஆவசியக மில்லையென்று நினைக்கிறோம். பவுண்டரீக யாகஸ்வரூபத்தை மனதிலுறுவோர்க்குத்தானாய்ச் சமாதானம் விளங்கும். பர்த்திருவியோகத்தால் பாரியைக்கு விரதம் முடிந்துவிட்ட தென்கிறவும் பிரம்மசாரி விவாஹவிரதம் செய்துகொள்ளவே யில்லையென்கிறவும் ஹேதுவினாலேயல்லவா அவர்களுடைய புணர்ச்சி தோஷமற்றதென்று அந்த யாகத்தில் அனுஷ்டிக்கப் படுகிறது. இப்படியாகில் உலகத்திலுள்ள பிரம்மசாரிகளும் விதவைகளும் ஏதேச்சையாய் சஞ்சரிப்பதில் பாதகமில்லையா வென்றாலோ அதினாலவர்களுக்கு விசேஷ பாதகமுமில்லையென்பது உண்மையேயாகிலும், அதினால் அவர்களுக்கு சிலலவுகிக பாதகங்கள் ஜனிக்கும். முதலாவது, அவ்வியவஸ்தாகமனத்தால் அவர்களுடைய மெய்மனங்களின் தார்ட்டியம் குன்றிப்போகும். இதுவுமன்றி விதவைகளும் பிரம்மசாரிகளும் ஏதேச்சையாய் சஞ்சரிப்பதில் பாதகமில்லையென்னும் பக்ஷத்தில், சுமங்கலிகளும் அவர்களைக்கண்டு நடைகோணி ஒழுகுவார்களென்பதுமன்றி, உலகத்தில் அனைவரும் விவாஹத்தை வெறுத்து கன்னிகைகளாயும் பிரும்மசாரிகளாயுமிருந்து விவாஹவியவஸ்தைகளை அடியோடு நசிக்கச்செய்வார்களல்லவா?

இவ்விஷயத்தைப்பற்றிய சங்கதிகளனைத்தையும் இன்று கூறிமுடியாதாகையால் ஸ்தூலமானவற்றை மாத்திரம் இவ்விடத்துரைத்தோம். யோசித்துப் பார்ப்பவர்களுக்கு மற்ற அம்சங்களெல்லாம் தானுய் விளங்கலாம். இந்த சங்கிரகமான விசாரத்தால் விவாஹம் கேவலம் சங்கேதமேயாகிலும் கடவுளின் கருத்தை யனுசரித்ததாகையால் இது ஆவசியகமான சங்கேதமென்று ஏற்படுகிறது. மற்றபாகங்களைக்குறித்து வருகிற பத்திரிகை யில் தொடர்ந்து விசாரிப்போம்.

---

## பகவத்கீதை.

### கங-வது அத்தியாயம்.

### அர்ஜுனன்சொல்.

க. ஓய் கிருஷ்ண! பிரகிருதி யையும், புருஷனையும், க்ஷேத்திரத்தையும், க்ஷேத்திரக்கியனையும், கியானத்தையும், ஸ்நேஹத்தையும், இவைமுதலான யாவற்றையும் அறியவிரும்புகிறேன்.

### கிருஷ்ணன்சொல்.

உ. ஓய் குந்திபுத்திரா! இந்தசரீரம் க்ஷேத்திரமென்று சொல்லப்படுகின்றது. இந்த சரீரத்தை எவன் அறிகின்றானோ அவன் க்ஷேத்திரக்கியனென்று சொல்லப்படுகிறான்,

ங. ஓய் பாரதா! சமஸ்த க்ஷேத்திரங்களிலும், க்ஷேத்திரக்கியனாக என்னை அறிவாய், க்ஷேத்திரக்ஷேத்திரக்கியாளை அறிவதேகியானமென்று எனக்கு அபிமதம்.

ச. ஓய் பாரதா! அந்த க்ஷேத்திரமெதுவோ, எப்படிப் பட்டதோ, என்ன விகாரத்தையுடையதோ, எதினின்று எதுஉண்டாகுமோ, அந்த க்ஷேத்திரக்கியன்யாரோ, என்னபிரபாவத்தை யுடையவனோ இவைஎல்லாம் சம்க்ஷேபமாக என்னால் அறிந்து கொள்வாய்.

ரு. அந்தஸ்வரூபம் இருஷிகளால் பஹுவிதமாக சொல்லப்பட்டிருக்கின்றது; நானுவிதமான வேதங்களாலும்பிரத்தியேகமாகச் சொல்லப்பட்டது; யுக்தாயுக்தஹேது விசாரத்தோடுங் கூடி நிஸ்ஸந்தேகமாய் ஸ்தாபிக்கானின்ற பிரம்மஸூத்திர வாக்கியங் களாலும் சொல்லப்பட்டது.

சா. பிருதிவ்வியாதி மகாபூதங்களும், அஹங்காரமும், புத்தியும், அவ்வியக்தமும், (கியானேந்திரியம்கர்மேந்திரியம்,மனது,இவைகளாகிய)பதினொருஇந்திரியங்களும், ஐந்தாகிய (சப்தாதி) விஷயங்களும்; (இவைஇருபத்துநாலு தத்துவங்கள்.)

எ. இச்சையும், துவேஷமும், சுகமும்’ துக்கமும், தேஹேந்திரியாயதி சம்ஹதியும், மனோவிருத்தியும், தைரியமும் இந்தவிகாரங்களோடுங் கூடியது க்ஷேத்ரமென்றுசங்கிரஹமாக சொல்லப்படுகின்றது.

அ. தன்னைஸ்தோத்திரஞ் செய்துகொள்ளாமலிருப்பதும், தன்தர்மத்தைப் பிரகாசிக்கச்செய்யாமலிருப்பதும், அஹிம்சையும்,க்ஷமையும், கபடமின்மையும், குருசேவையும், சுசித்வமும்,சலனமின்மையும், மனோநிக்கிரகமும்;

கூ. விஷயங்களில் ஆசையின்மையும், அஹங்காரமின்மையும். ஜன்மமரண ஜராரோகதுக்கங்களிலுள்ள தோஷங்களைக் காண்பதும்,

க0. புத்திரர்தார கிருஹாதிகளில் ஆசக்தியில்லாமையும், நிஷ்பக்ஷபாதமும், சந்தோஷத்திலும் துக்கத்திலும் நிரந்தர சமசித்தமுடைமையும்.

கக. என்னிடத்து வேறுகதியில்லைஎன்பதாகிய சம்பூர்ணமான பக்தியும், விஜனஸ்தலவாசியாவதும் (என்னால் ஜனங்களல்லாமல் அமைதியான இடங்களில் சென்று தனியாகயோசிப்பதும்) ஜனசங்கமத்தில்அனுராகமின்மையும்.

கஉ. நித்தியமான பரமாத்மக்கியானமும், தத்துவக்கியானத்தில் திருஷ்டியும், இதுகியானமென்று சொல்லப்படும். இதற்குப்புறம்பானது எதுஉண்டோ அதெல்லாம்அக்கியானமென்று சொல்லப்படும்.

கங. கியேயம் அல்லதுதெரியத்தக்கதெதுவோ அதைச்சொல்லுகிறேன். எதையானுலறிந்து மோக்ஷமடையத்தக்கதோ அந்த அனுதியாகிய பரமான பிரம்மம் சத்துமல்ல அசத்துமல்ல என்று சொல்லப்படுகின்றது.

கச. அந்தப்பிரம்மம் எவ்விடத்தும் ஹஸ்தபதங்களையுடையதாகி, எவ்விடத்தும்நேத்திரசிரோத்திரமுகங்களை யுடையதாகி எவ்விடத்துஞ் செவிகளையுடையதாகி எங்கும்வியாபித்து லோகத்தில் வீற்றிருக்கின்றது.

கரு. அது சகலேந்திரிய வியாபாரங்களோடும் பிரகாசிப்பதுபோ லிருந்தும், சகலேந்திரியதங்களாற்றயும், எதிலும்ஒட்டாததாயும், யாவற்றையும் தரிப்பதாயும், நிர்குணமாயும் குணங்களை அனுபவிப்பதாயும்,

கசு. சராசரங்களாகி பிராணிகளுடைய உள்ளத்திலும் புறத்திலும் ரூபமற்றதாவீற்றிருப்பதால் அது(பிரும்மம்.)அறியவும் அடையவும் துஸ்தரமானதாய் சமீபத்தில்தானே (இருக்கின்றது.)

கஎ. அது(பிரம்ஹம்) பிரிவில்லாததாய், சகலபூதங்களிலேயும் பிரிந்தது போலவேயிருக்கின்றது. பூதங்களைப் பரிக்கின்றதும், சர்வத்தையும் லயிக்கச்செய்கின்றதும், ஜனிக்கச்செய்கின்றதும் அந்தப் பிரம்ஹமென்றறியத்தக்கது.

கஅ. சூரியாதி தேஜஸ்ஸுகளுக்கும்பிரகாசமானதும், அக்கியானத் துக்குப் புறம்பானதும், பிரகாசமானதும், அறியத்தக்கதும், ஞானகோசரமானதும், ஸமஸ்தப்பிராணிகளுடைய இருதயத்தில்இருக்கின்றதும் என்று (அது)சொல்லப் படுகிறது.

க௯. இவ்வாறு க்ஷேத்திரத்தையும், அப்படியே கியானத்தையும், கியேயத்தையும்சங்கிரஹமாய்ச்சொன்னேன். என்னுடைய பக்தாள் இதைத்தெரிந்து கொண்டு என்னுடைய சுவபாபத்திற்கு அர்ஹராகின்றார்.

உ0. பிரகிருதியையும், புருஷனையும்,இவ்விரண்டையும் நித்தியமென்று அறிவாய். (சகல)விகாரங்களும் பிரகிருதியினால் ஜனிப்பனவாக அறிவாய.

உக. பிரகிருதியானது(சரீரசுகதுக்காதிகளாகிய) காரியங்களை ஜனிக்கச் செய்வதற்கு காரணமென்று சொல்லப்படுகிறது. புருஷன் ஸுகதுக்கங்களை யனுபவிப்பதற்குக் காரணமென்று சொல்லப்படுகின்றது.

உஉ. புன்ஷன் பிரகிருதியினிடத் திருப்பவன். பிரகிருதியால் பிறந்த குணங்களையனுபவிக்கிறான். இந்தபுருஷனுக்கு இந்தகுணசக்தி புண்ணியா புண்ணியரூபஜன்மங்களை யுண்டாக்குவதற்குக் காரணமாகின்றது.

உங. இந்த தேஹத்தில் (கரியகாரணவியாபாரங்களில்)பார்ப் போனும், யோசனை சொல்பவனும், பர்தாவும், அநுபவிப்பவனும், மஹேசுவரனும், பரமபுருஷனும், பரமாத்மாவேயென சொல்லப்படுகிறது.

உச. எவன் இவ்விதமாக, புருஷனாகிய க்ஷேத்திரக்கியனையும், குணங்களோடுங்கூடிய பிரகிருதியையும், அறிகின்றானோ, அவன் சர்வவிதத்திலும் வர்தித்தபோதிலும் மீண்டும் பிரப்பதில்லை.

உரு. சிலர் தியானத்தினால் புத்தியில் (செலுத்திய) மனதைக்கொண்டு பரமாத்மாவைப்பார்க்கின்றார்கள். பின்னும் சிலர் சாங்கியயோகமாகிய கியானத்தினாலும், சிலர் கர்மயோகமாகிய (நிஷ்கர்ம) கர்மங்களாலும், பரமாத்மாவைப் பார்க்கின்றார்கள்.

உசு. பின்னும் சிலர் இவ்வாறு அறியாமல் பிறரால்கேட்டு உபாசிக்கின்றனர். வேதாந்த சிரவணபராளாகிய அவர்களும் மரணத்தைஅதிக்கிரமிக்கின்றனர்.

உஎ. ஓய் பரதசிரேஷ்டனே! ஸ்தாவரஜங்கமரூபமாகிய (எவ்வளவு) ஸ்வல்பவஸ்துவும் உண்டாகிறதோ அதெல்லாம் பிரகிருதி புருஷ சம்பந்தத்தால் உண்டாகிறதென்று அறிவாய்.

உஅ. எவன் சமஸ்த பிராணிகளிலும் சமமாக இருக்கின்ற பரமேசுவரனை அந்தப்பிராணிகள் அழிந்தும் அழியாததாக பார்க்கின்றானோ,அவனே பார்க்கின்றவன். (என்றால் பூதங்களழிந்து அவைகளில் அந்தரியாமியாகிய பரமாத்மா அழிவதில்லையென் றறிபவனே நேத்திரமுடையவன்.)

உ௯. அந்தகாரணத்தினால் சமஸ்தபிராணிகளிடத்தும் சமமாகவீற்றிருக்கும், பரமெசுவரனைப் பார்க்கின்றவன் தன்னால் அவ்வாத்மாவுக்கு யாதொரு தீங்குசெய்யாதவனாகின்றானோ, அதனாலேயெ அவன் பரமான மோக்ஷகதியை அடைகின்றான். (என்றால் பரமாத்மா ஸர்வத்திலும் அந்தரியாமியாக விருப்பதாய் காண்கிறவன் அதர்மத்துக்குள்ப்படாமையால் மோக்ஷமடைவான்.

௩0. எவன் கர்மங்களைப் பிரகிருதி ஸ்வபாவத்தினால் ஸர்வப்பிரகாரமாக செய்யப்படுவதாக எப்பொழுது பார்க்கின்றானோ, அப்பொழுது அவன்க்ஷேத்திரக்கியனைகர்த்தாவில்லாதவனாக பார்க்கின்றான்.

௩க. எப்பொழுது பூதபின்னபாவம் ஒன்றிலிருப்பதாகவும் அதினின்றும் யாவும்ஜனிப்பதாகக் காண்கின்றானோ அப்பொழுது பிரம்மத்தை அடைகின்றான்.

௩உ. ஓய் குந்திபுத்திரா! அநாதியாகையாலும், குணரஹிதமானதாலும், நாசமற்ற இந்தபரமாத்மா சரீரத்திலிருந்தும் (யாதொ

ன்றும்) செய்வதில்லை. கர்மபலத்தையும் திண்டுவதில்லை.

௩௩. எவ்வாறு ஆகாயம் ஸாவவியாபியானாலும் சூக்ஷமமானதினால் (எதனோடும்) சம்பந்திக்காதோ அவ்வாறேஆத்மாவும் சரீரமனைத்திலு மிருந்தும் ஒட்டுவதில்லை.

௩௪. ஓய் பாரதா! இவ்வாறு ஒன்றான சூரியன், சமஸ்தமான ந்தஜகத்தைப் பிரகாசிக்கச்செய்கின்றானோஅவ்வாறேக்ஷேத்திரக்கிய'ன் ஸர்வக்ஷேத்திரங்களையும் பிரகாசிக்கச்செய்கின்றான்.

௩௫. இவ்வாறு க்ஷேத்திரக்கிய விலக்ஷணங்களையும், பூதங்கள்பிரிகிரு தியினின்றும் மோக்ஷமடைவதையும் ஞானக்க ண்களால் யார் பார்க்கிறார்களோ அவர்கள் பரப்பிரம்மத்தை யடைகின்றனர்.

---

## சுக்கிலயஜுர்வைச்சேர்ந்த, வாஜஸநேயஉபநிஷத்தென்கிற ஈசோபநிஷத்து.

பிரபஞ்சத்தில் சலித்துக் கொண்டிருக்கும் சகலமும் ஈசனாலே சூழப்பட் டிருக்கின்றது. அதினால் விடுபடுவதினால் இன்பமடைவாய். ஒருவர் பொருளிலும் ஆசைவைக்காதே. கர்மங்களைச் செய்வோனாகவே இவ்விடத்தில் நூறுவருஷம்வரை ஜீவித்திருக்கக்கடவான். மனிதனிடத்தில் கர்மம் பற்றாமலிருப்பதற்கு இஃதவிட வேறுவழியில்லை. ஆத்மஹத்தி செய்யும் ஜனங்கள் யாரோ அவர்கள் சூரியனில்லாத காடாந்தகாரமான உலகங்களை யடைகின்றனர். அவன்(ஆத்மா) ஒப்பற்றவனாய் சலனமின்றியே மனதையும் அதிசயிக்கும் வேகமுடையதாம். தேவர்களும் அடையக்கூடாமல் அவன்முன் சென்றான். மற்றவரெவ்வளவு வேகமாயோடினாலும், அவன்நின்று கொண்டே அவர்களைக்கடக்கிறான். அவனுக்குள்ளே வாயுகர்மங்களை தரித்திருக்கிறான், அவன்சலிக்கிறான் அவன் சலிக்கிறதில்லை, அவன் தூரத்திலிருக்கிறான், அவன்சமீபத்திலிருக்கிறான், சகலத்துக்கும் உள்ளே அவனிருக்கிறான். சகலத்துக்கும் வெளியிலவனிருக்கிறான். எவன்சகலபூதங்களிலும் ஆத்மாவையும், ஆதமாவில்சகல பூதங்களையும் காண்கிறானோ அவனுக்குப் பிறகு ஐயமில்லை. சகலபூதங்களும் ஆத்மாவேயென்றும், அதுஒன்றேயென்றும்ஒருவனறிவானாகில் பிறகு அவனுக்கு அறிவின்மையேது, சந்தேகமேது? அவனெங்கும் நிறைந்தவன், ஒளிபொருந்தியவன், எவ்விதசரீரமுமற்றவன், பரிசுத்தமானவன், பாபமற்றவன,விவேகி, மனதையாள்பவன், சகலபூதங்களுக்கும் மேலானவன், தானாயுண்டானவன்; அவன் பொருள்களையததின் இயில்புக்குத் தக்கபடி சாசுவதமாகவும் சமமாகவும் அமைத்தான். இயற்கையைத் தொழுவோர்கள் (நாஸ்திகர்)அந்தகாரத்தை யடைவார்கள். படைப்பைத் தொழுவோர் இன்னும் கொடிய அந்தகாரத்தை யடைவார்கள். பயனானது இயற்கையைத் தொழுதலிற்கும் அன்னியம், படப்பைத் தொழிதலிற்கும் அனியம், என்றுஉ.ரத்தனர். இவ்வாறுஅவற்றைவெளியிட்ட சான்றோர் சொல்லக்கேட்டோம். ஸம்பூதியையும்விநாசத்தையும்யார்அறிகிறானோ அவன்வினாசத்தால் மிருத்தியுவைவென்று,சம்பூதியால் அமிருதத்துவ மடைகிறான். அவித்தியையை உபாசிப்பவர் அந்தகாரத்தை யடைகின்றனர். வித்தியையை உபாசிப்பவர் அதிலும் கொடிய அந்தகாரத்தையடைகின்றனர். பயனானது அவித்தியைக்கும் அன்னியம், வித்தியைக்கும் அன்னியம், என்றுருரைத்தனர். இவ்வாறு அவற்றை விளக்கியவர் சொல்லக்கேட்டோம். வித்தியையும் அவித்கியையும் அறிந்தவன் அவித்தியையால் மிருத்தியுவைவென்று, வித்தையையால் அமிருதத்துவ மடைகிறான். சத்தியத்தையே கடமையாசஉடையஎனக்கு, ஓபூஷனே! என்காட்சிக்கு தேஜோமண்டலத்தால் சூழப்பட்ட சத்தியமார்க்கத்தைத் திறப்பாயாக. ஓபுருஷனே ஒபபற்றருஷியே, யமனே, சூரியனே, பிரஜாபத்தியனே! உன்கிரணங்களைப் பிரஸரிக்கச்செய்து உன்னொளியைச் சேகரிப்பாயாக. உன்மங்களகரமான ரூபத்தை நான்பார்க்கட்டும். அந்தபுருஷனே நானாகவிருக்கிறேன், என்னுடைய பிரதானாக்கினி அமிருதமாகட்டும், பிறகு இவ்வுடல் பஸ்மமாகட்டும், ஓம், ஓ! என்மனதே உன்செயல்களைநினை, ஓ! என்மனதே உன்செயல்களைநினை. ஓஅக்கினியே, சகலத்தையுமறிந்தஓதேவனே எங்களைஆநந்தமார்க்கத்தால் போகத்தை அடைவிப் பாயாக, எங்கள் கோணலான பாபங்களை யழிப்பாயாக, நாங்களுனக்கெங்களுத்தமமான வந்தனத்தைத்தருவோமாக.

---

## நிருபம். .

ம - ா - ா - தத்துவபோதினி கர்த்த ரவர்கட்கு,

**சோதரர்களே!** விகாரரஹிதமாகவும் ஸத்சிதாநந்தவடிவாகவும், ஸாக்ஷிமத்திரமாகவும்,ஏகிபாவமாகவும், பிரபஞ்சாகார மாக

வும், ஸம்பந்த ரஹிதமாகவு மிருக்கிற கடவுளானவர் அவரிடநிலையை யெளிதி லறிந்துகொண்டு அத்வைதநிஷ்டையைப் பிசகாமலநுசரிக்க அவகாசமுண்டாகும்படி யாகவும்,அபேதமாகவும், சர்வவியாபகரா யிருக்கிறாரென்பதை சுருதி யுக்தி யநுபவத்தால் நம்பும் படியான நடவடிக்கை களி லிருந்துகொண்டே உண்மை ஞானத்தை விளக்கிக்கொள்ள யத்தனப்படாமல், தேஹமே ஆத்மா, பந்தமேமோக்ஷமென்று நம்பி அதோகதியையடைகிற விஷயாபிமானமுள்ள பஹிரங்கஸ்தாளிட ஸஹவாசம் என்னைவிட்டு நீங்குவதற்கு மாதமாத மென்பார்வைக்குக்கிடைத்துவருகிற தங்களது பத்திரிகையேஸாதனமாயிருப்பதினாலே பிரபஞ்சத்தையும் அதன் அநுபவங்களையும் தேஹக்கூறையும் அதன்பிரயோசனங்களையும் பற்றி, எனது புல்லறிவுக்கு தோற்றிய, இதனடியிற் காண்கிறவிஷயங்களைத் தங்கட்குத் தெரிவித்து, என்னிடத்திலுள்ள பிசகுகளைஒழுங்கு படுத்திக்கொள்ளத்துணிந்து யானெழுதுகிற இச்சஞ்சிகைக்குத்தங்கள்பத்திரிகையிலிடங்கொடுக்க வேண்டுமென மிகவுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரம்ம சைதன்னியமென்கிற சுவரூபத்தினிடத்தில் மூலபிரகிருதி யென்கிற ஒருமாயாசக்தி பிரதிபிம்பிக்கப்பட்டு அதன்சேஷ்டையினால் சப்த, ஸ்பரிச,. ரூப, ரஸ,கந்தம், என்கிற ஐந்துவிஷயங்கள் ஐந்துபூதங்களாகவும் அந்தப்பூதங்கள் அநேகபேதங்களான ஸ்தாவரஜங்கம ரூபங்களாயுள்ள பிரபஞ்சமாகவுந் தோற்றப்பட்டன.

இப்பிரபஞ்சந் தோற்றுவதற்குக் காரணம்பஞ்சபூத கலப்பாயும், பிண்டாகார மாயுமிருக்கிற, சரீரந்தான்.

இச்சரீரத்திலுள்ள விந்தைகள் யாவரும் சவனிக்கத்தக்க வைகளாகையால் அவைகளை இவ்விடத்திற் குறிக்கிறேன்.

இச்சரீர்த்தில் சுபாவமாயிருக்கிற சுவாஸவாயுவானது சரீரத்தைக் காப்பாற்றுவதற்கேவுபயோக முள்ளதாயிருக்கிறது. இச்சுவாஸம் மூலாதாரத்திலிருந்து கிளம்பி அதன் ஓர்பாகம் கபாலத்திற செல்லுகிறதுமன்றி, மற்றோர் பாகம்நாசியல்லது வாக்கின்வழியாக வெளிப்பட்டு அதில் சில அங்குலப்பிரமாணம் சேதப்பட்டுப் போகிறது. மீதியை மேற்குறித்த கபாலத்திற்சென்ற அம்சமானது கிருஹித்துக்கொண்டு மூலாதாரத்திலேயே போய்ச்சேருகிறது. இப்படிக்குநிமிஷந்தப்பாமல் ஊர்த்துவமுகமாசவும், அதோமுகமாகவும், சென்றுவருகிற இச்சுவாஸமானது சுஷுப்தி யாவஸ்தை காலத்தில் உக்கிரமாய் நடப்பது ஸ்வபாவம். அதனால் தேஹத்திற்கு மிகவும் ஆரோக்கியம். ஜாக்கிராவஸ்தை காலத்தில் சுவாஸநடைலேசாயிருக்கவேண்டும் ; அப்படிக்கில்லாமல் உக்கிரமாய் நடக்குமாகில் தேஹத்தில்பல க்ஷீணம் நேரிட்டு சுவாஸவாயுவின் மூலாதாரவேருக்கு அசைவுண்டாயிருக்கிறதென்றும்அது அந்தியகாலசூசனை யென்றுங் கொள்ளவேண்டும். அப்படிநேரிடாமலிருக்கச் செய்யவேண்டிய ஜாக்கிரதையென்னவெனில், ஜாக்கிராவஸ்தையிற் சுவாஸநடை நயமாயிருப்பதற்கு தேஹதிருடங்காரணமா யிருப்பதால் சரீரத்தை ஶ்ரமப்படுத்தாமற் காக்கும்பொருட்டு வழக்கத்தையும் சக்தியையும் மிதத்தையும் மீறியாதொருகாரியத்தையுஞ்செய்யத்துணியலாகாது.

சிற்றின்ப அனுபவத்தால் வெளிப்படுகிற சுக்கில் சோணிதங்கள் தேஹத்தின் யாவத்ஸாராம் சங்களையும் புழிந்து ஒருபாகமாயிரங்குவதினாலேயும், இது தேஹத்திற்கு பலஹீனமுள்ளதா யிருப்பதினாலேயும், இந்தவிஷயத்தில் மிகவும் மிதமாயிருக்க வேண்டியது கடமையாயிருக்கிறது.

பிரக்ஞைதப்பியிருக்குங்கால் சுவாஸம்மிகவும் மிருதுவாய் நடக்குமாகில்அபாயமே. இதல்லாமல் நிஷ்கரிஷையாயிருக்கிற அநேகசில்லரைவாயுக்கள் சுவாஸநடையின் சகாயத்தால் பிரகாசித்துக்கொண்டு தேஹத்தின் பலவிடங்களில் விளங்குகின்றன.

அவைகளிலொன்று மனசு, சித்தம், புத்தி, அஹங்காரமென்கிற நான்கு சுவபாவங்களையுடைய சுத்தஸத்வகுணமாகையால் அது சுஷுப்தி யாவஸ்தை காலத்தில்பிரகாசமின்றி அடங்கிக்கிடப்பதும் சுவப்னாவஸ்தையைவிட ஜாக்கிராவஸ்தையில் அதற்கு விசேஷசக்தியுண்டாவதும் சுவபாவந்தான். ஏனென்றால் சுவாஸம் பலப்பட்டால் சுத்தஸத்வகுணம் மலினப்படும்; நயப்பட்டால் பிரகாசப்படும்.

இவ்வஸத்வகுணத்திலடங்கியிருக்கிறநான்கு சவபாவங்களில் மனசானது திர்காலஸ்திதியை சவனியாமல் அதன் முன்னிலையில் தோற்றப்படுகிறவிஷயத்தில் ஊசிகாந்தம்போல் உடனே வியாபிக்கும். சித்தமோவெனில் அப்படிமனசு வியாபித்த வுடனே யாதொரு அனுமானத்தைக்கொடுப்பதேயாம். புத்தியோவெனில் அப்படிக் கனுமான

முண்டானவுடன் விஹிதாவிஹிதங்களைவிசாரித்து, உசிதமான நடவடிக்கையின்னதென்று நிர்ண்ணயிப்பதேயாம். அஹங்காரமோவெனில் யாதொருகாரியத்தைச் செய்யத்துணிவதேயாம்.

யாதொருவிஷயத்தில் மனசானது வியாபிக்கப்பட்டு சித்தத்தாலனுமான முண்டானவுடனே அவ்விஷயத்தை புத்தியென்கிற விசாரணைக்குக் கொண்டுவந்து பதட்டமன்றியில் அஹங்காரங் கிளம்பிநடத்தப்படுகிற நடவடிக்கை பழுதல்லாததாகவும் அங்கீகாரமுள்ளதாகவுமிருக்கும் இந்தகிரமம்தப்பிஎந்த விஷயத்திலாகிலும் மனசு,வியாபித்தஅல்லது அனுமானமுண்டானவுடனே, விசாரணையன்றியில் அஹங்காரங்கிளம்பி நடவடிக்கை நடக்குமாகில் அதனால் ஆபத்துநேரிட்டுசரீரத்துன்பமும் குலத்துக்கேகனக்குறைவும் பொருள்சேதமும் சம்பவிக்குமென்பது அனுபவத்தால் உறுதிப்பட்டிருப்பதை நிக்கிரஹிக்கயாருக்குஞ்சாத்தியமில்லையாகையால் விசாரணையில்லாதநடவடிக்கைகைகூடாது.

துற்செய்கைகளினால் தீங்குண்டாய் வருத்தப்படுஞ் சமயத்தில்மாத்திரம் புத்தியினால் விசாரிக்க யேற்படுகிற மவுட்டியஜனங்களுக்காக பச்சாத்தாபத்தை பாராட்டுவதில் பயனென்னை.

பஞ்சபூதங்களாகிற ஐந்துவிஷயங்களை அறிந்துகொண்டு சுகதுக்காவஸ்தைகளை அனுபவிக்கும் படியாக அந்தஃகரணத்திற்குதவி செய்ய ஞானேந்திரியங்களென்கிற ஐந்து வாயுக்கள் அவைகளுக்காக நிஷ்கரிஷையாயிருக்கிற ஸ்தலங்களில் தர்பணங்கட் கொப்பாக தேஹத்தில் விளங்குகின்றன.

இவ்விந்திரியங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூதசம்மந்தமாயுள்ள விஷயத்தைகிருகிக்க சாதனமாயிருக்கிறது. இவ்விந்திரியங்களிலெதிலாவது அந்தஃகரணப் பிரவேசமுண்டானாலன்றி விஷயக்கிரஹணங் கிடையாது.

இவ்விந்திரியங்கள் வர்த்தமான காலஸ்திதியைப் பற்றியதேயன்றி பூதபவுஷ்யத் காலஸ்திதிகட் குதவாது. ஓரிந்திரியவிஷயத்தில் அந்தஃகரணம் பிரவேசமுண்டாயிருக்கையில் மற்றஇந்திரியங்களின் விஷயங்கள் மித்தைகளாயிருக்கின்றன.

சுஷப்திகாலத்தில் அந்தஃகரணம் லயிச்சிருப்பதால் அச்சமயத்தில் இந்திரியங்கள் யாவும்பிரயோஜனமற்றவைகளாயிருக்கின்றன.

அந்தஃகரணம்திருடமாயிருக்கையிலது பஞ்சேந்திரியங்களி லெதிலாவதொன்றில் பிரவேசமன்றியிலிராது. அந்தஃகரணமானது இவ்விந்திரியங்கள் வழியாக விஷயாதிகளில் நம்பிக்கைவைப்பதுதத்சம்மந்தமாய் நடவடிக்கைகள் நடத்தத் துணிவதுமே பிரபஞ்சானுபவமா யிருக்கிறது. இந்த அனுபவமானது அது லபித்த நிமிஷம் நீங்கினால், மித்தையாய்பவிப்பதுமன்றி வியஸனஸாகரத்தில் மூழ்கச் செய்கிறதாகையால் இந்திரியத்தில் இந்தஅனுபவத்தை நம்பக்கூடாதென்பது நிச்சயம்.

யாதொருவரும் அறிவினால் உளகிக்கிறஆலொசனை ஸமயத்தில் சுவாசத்தை தன்னிலையில் ஸ்தம்பீகிருதமாய் நிருத்துவது சுவாதீனமாகவும் அவ்வாலோசனை சமயத்தில் நித்திரையி லெப்படியோ அவ்வித மாகவே அந்தஃகரணம் அடங்கி இந்திரியங்கள் பிரயோஜனமற்றிருப்பது வழக்கமாகவு மிருப்பதால் அப்படி அந்தஃகரணம் கைவசப் படுகிற சுவல்பகாலத்தில்அதை விஷயாதிகளில் பிரவேசியாதபடி யடக்கி தன்னிட நிலையெதுவென்று அறிவினால் நிதானிப்பதே ஆத்மநிஷ்டையாம். இந்தநிஷ்டையில் சாக்ஷிமாத்திரமா யிருக்கிற அறிவே தானென்கிற நிச்சய ஜ்ஞானமுண்டாகி சாசுவதமான ஸத்சிதாநந்த அனுபவஞ் சித்திக்கிறது.

இவ்வளவு சூக்ஷமமாகிய இந்நிஷ்டையில் அகத்தியமில்லாத பேதைகள் கதியடைய வேறு மார்க்கமுண்டென்று அவர்கள் நம்புவதில் பயனில்லையே.

பின்னு மிச்சரீரத்தில் பிரபலமான மூன்று வாயுக்கள், அப்பு, தேயு, வாயுவென்கிற மூன்று பூதங்களின் சுவபாவங்களை யுடையவைகளால் வாத, பித்த, சிலேஷ்மமென்கிற மூன்று நாடிரூபங்களாக தேஹத்தில் பிரகாசிக்கின்றன. இந்நாடிகளில்வாயுவின் சுவபாவத்தையுடைய வாதம் சிர்ஷ்டிகர்த்தாவாகவும், தேயுவின் சுவபாவத்தையுடைய பித்தம் ரட்சகர்த்தாவாகவும்,அப்புவின்சுவபாவத்தையுடையசிலேஷ்மம் ஸம்ஹாரகர்த்தாவாகவும், அதிகாரங்களை கைக்கொண்டு நடவடிக்கைகளை நடத்திவருகின்றன. சிலேஷ்மநாடி பித்தநாடிக்கும், பித்தம் வாதநாடிக்கும், அடங்கிநடக்கவேண்டும். சிலேஷ்மநாடி மேலிட்டால் அபாயம்; பித்தநாடி மேலிட்டால் உடனே அதுநிதானப்பட்டு, சிலேஷ்மநா

டியை அதிகப்படுத்தி அபாயஸ்திதியில் விட்டுவிடும் தேஹஸ்திதியை யறிந்து கொள்வதற்கு இந்நாடிகள் தகுந்த சாதனங்களாயிருக்கின்றன.

இவைகள் நீங்கலாக மற்ற ஒவ்வொரு சில்லரைவாயுவும் அததுக்குத்தக்கபடி தேஹஸம்பந்தமாயுள்ள காரியங்களை நடத்திவர ஏற்பட்டிருப்பதால், அவைகளிற்சிலது தேஹஸம்ரட்சணார்த்தமாய் உட்கொள்கிற ஆகாரங்களில் ஜலத்தையும் மற்றவுண்டிகளையும்கிரமமாய்க்கொண்டுபோய்நிஷ்கரிஷையானவிடங்களில் பிரத்தியேக பிரத்தியேகமாய்ச் சேர்க்கின்றன. அப்படிச் சேர்க்கப்படுகிற ஆஹாரங்களைச் சிலவாயுக்கள் ஜீர்ன்னப்படுத்துகின்றன. அப்படி ஜீர்ணமானமேல் அந்த ஆஹாரங்களின் சாராம்சங்களைச் சிலவாயுக்கள் தேஹத்திலுள்ள வனேக கால்வாய்களிற்கொண்டுபோய் தேஹாத்தியந்தம் கலரச்செய்து மாம்சம், ரக்தம், எலும்புகள், நரம்புகள், குடல்கள், நகங்கள், ரோமங்கள் முதலியவைகளை விர்த்திசெய்கின்றன. அவ்வித விர்த்திக்காக வுபயோகப்படுகிறதுபோக, மீதியுள்ள அம்சம் ஒவ்வொருரோமக்கண்வழியாகவேர்வையால் வெளிப்பட்டு தேஹத்தின் தோலின்மேல் அழுக்காகச்சேருகிறது. இவ்வழுக்கைப்போக்கும்பொருட்டு அன்ருடகம் ஸ்நானம்செய்யாவிடில் அழுக்குரோமக்கண்களை யடைத்துக்கொள்ளுமென்பதும் அதனுல் தேஹத்தில் துர்ஜலந்தங்கி யுபாதியுண்டாகுமென்பதும் யாவருக்கும் சுவாநுபவமே. இப்படிக்கு ஆஹாரங்களின் சாராம்சங்கள் உபயோகப்பட்டமேல், சக்கையாயிருக்கிற அம்சங்கள் அவைகளுக்காக வேற்பட்டிருக்கிற மலஜல வழிகளிற் சென்று வெளிப்படும்படியாய்ச் சிலவாயுக்கள் செய்கின்றன. தேஹத்திலுள்ள மற்ற துவாரங்களின் வழியாக சில துர்ஜலங்களும் அழுக்குகளும் வெளிப்படுகிறதுமுண்டு. இந்த யாவத்துவாயுக்களும் அஹோராத்திரம் நிமிஷமாவது இடைவிடாமல் அததன்காரியங்களை யெச்சரிப்புடன் நடத்திவருவதினுல் உபாதிக் காஸ்பதமாயுள்ள ஆஹாரங்களை விலக்கி வழக்கப் பட்டிருப்பவைகளைமாத்திரம், காலமும் அளவுந்தப்பாமல் சாதித்துவராவிடில், தேஹத்திலு[illegible] ரக்தமாம்ஸாதி குடல்களைப் பாதிக்கவுற்[illegible] மாகையால் இந்தவிஷயத்தில் மிகவும் ஜ[illegible] கிறதை வேண்டும். கொள்கிற ஆஹாரங்க[illegible] ஜீர்ன்னப்படுத்துகிறதற்குச்சித்தமாயிருக்கிற வாயுக்களுக்கு நித்திராவஸ்தையின் சகாயம் முக்கியமாகையால் இந்தஅவஸ்தையை நிர்பந்திக்க ஒண்ணுது. மேலும் தேஹத்தின் எந்தவிடத்தில் ரக்தவோட்டமில்லையோ அவ்விடத்தில் உணர்ச்சியில்லையாகைசயால்பிராணவாயுவென்பது ரக்த ஸ்வரூபமாயிருக்கிறதென்று நம்பி ரக்தபுஷ்டிவிஷயத்தில்கவனமிருக்கவேண்டும்.

கர்ம்மேந்திரியங்களென்று பெயர்பெற்று நடவடிக்கைகளைநடத்தகருவிகளாயிருக்கிறஜந்துவாயுக்களும் சேஷ்டிப்பதற்கு அஹங்காரங்காரணமாயிருப்பதால் அஹங்காரங்கிளம்பி னுலன்றி யிந்தவாயுக்களுக்குசக்தியில்லை.

தேகஸ்திதியை விசாரிக்கையில் இதுஅபாயகர முள்ளதாகவும் பருஜாக்கிரதையுடன் காப்பாற்றத்தக்கதாகவும் இதனுல் விளையக்கூடிய தீங்குகள் அபாரமாகவு மிருக்கின்றது. இச்சரீரத்தின் அநுபவமோவெனில் நரகாநுபவமேயாம்; இதி லடங்கியிருக்குந்துர்கந்தங்களுக் கொப்பாகச் சொல்வதற்கொன்றுமில்லை.

ஆகையால் இச்சரீரத்திலும் இச்சம்மந்தமாயுள்ள விஷயங்களிலும் அபிமானம்வைக்காமல் தத்துவஞான விசாரணையில் காலத்தைச்செலுத்தி கதியடைவதுசிதமென்பதென்னது சித்தாந்தம்.

| | |
|---|---|
| க௮கஉ௬-௵ அக்டோ<br>பர் ௴-க௯௨<br>உடுமலைபேட்டை,<br>கோயம்புத்தூர்ஜில்லா. | இங்ஙனம்<br>உண்மையைநம்பு<br>வோன். |

---

மக்களனைவர்க்குந் தத்துவரஸத்தை யூட்டி சாசுவதக்கியான சரீரத்தைவளர்த்துஆநந்தநிலயத்தில் நீடுவாழச்செய்யுங் கர்த்தனது கிருபாகுணப்பிரதி ரூபமாகிவந்துதித்த தத்துவபோதினியே?

இத்தடவை நீயேற்றுவந்த தத்துவரஸாமிருதத்தை மாந்திக்களிப்புற்ற கிருதக்கியதையுடன் எனக்கும் உன்னன்பருக்கும் அளவிறந்த வந்தனமுள மகிழ்ந்திந்தோணுய் இன்[illegible]யே னிதனடியிற் கோர்க்கும் சிலசொன்[illegible]க் கோர்வைகளை நீபிரீதியுட னணிந்து [illegible]ன்போலவே என்ருேழருக்கு நேத்தி[illegible]ராச்சவமும், மோதமும் உணடாக்குவாயென வெகுவிநயத்துடன் மன்ருடுகிறேன்.

அன்பர்களே! அடியேன் கடந்தபத்திரிகையில் இனிவிசாரிக்கப் படுமென்பதாக விட்டிருந்த சங்கதியைக்குறித்து இப்போது யோசிக்கவேண்டியதாவசியக மாயினும், இ

ன்று வேறொருவிஷயத்தைப்பற்றி இடையில் சிலவசனங்களுரைப்பதுயுக்தமாகத்தோற்றுகின்றமையால் அவ்வாறேசெய்து முன்னதின் விசாரத்தை மறுதடவைக்குவைத்துக்கொள்ள நிச்சயித்திருக்கின்றனன். அஃதாவது-சிலநாட்களுக்கு முன்னர், சேலமாநகரில் பகவானை த்தியான மார்க்கத்தில் தொழுதேற்றும்படி கூடிய புஜனைகூடவிஷயமாய்"சேலநிவாச ஸ்வதேசி" யென்றுகையொப்பமிட்டிருந்த வோர்நண்பர்சுருக்கமாய் சிலபிரஸ்தாபங்கள் செய்திருந்தாரென்பது எல்லோர்க்குந் தெரியுமல்லவா? அச்சங்கத்துக்கடுத்த விசேஷங்களைக்கோயம்புத்தூர், பெங்குளூர், முதலியவிடங்களில் வசிக்கானின்ற அன்பர்களில் பலர் சற்று விவரமாயறிய விரும்புகிறதாகக் கேள்விப்படுகிறேனாதலான் அக்கூடத்தாரில் ஒருவனாகிய வடியேன் அதனையொருவாறு எடுத்துரைக்க மனங் கொண்டிருப்பதுபற்றி யப்படிசெய்ய என்னன்பர் விடைதருவாரென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பஜனைகூடமானது முன்போலவே வாரத்தில் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமை கடோறும் மாலை ௭-மணி முதல்-௮-மணி வரையில் கூடிவருகின்றது. இதிற்சேரும்சோதரர்கள் பொதுவாய்அபேதனம், சத்தியத்தி லேக்கமுள்ளவரா யிருப்பார். ஆகவேயன்னோரில் யாராகிலுமோர் சோதரர் மற்றவர் முன்னர் எழுந்து முதலில் தேவஸ்துதியைவாசித்துப்பிறகுஅவரேனும் மற்றொரேனும் காலக்ஷேபார்த்தம் யாதொரு சத்விஷயத்தைப்பற்றி சர்ச்சித்துமுடிப்பர். பின்புமுடிவாக பகவான்பொருட்டு வந்தனவாக்கியங்கள்ஸ்மரிக்கப்படுகின்றன. இதனுடன் தாசவர்கமுங்கலைய அவரவரில்லத்திற்கேகாநிற்கின்றனர். பிரகிருதத்தில் காலக்ஷேபத்திற்காக உபயோகப்படுவன முக்கியமாய் கீதையும், மொழிபெயர்க்கப் பட்டசிலவுபநிஷத்துகளேயாகையாலும், தகுந்தகிரந்தங்கள் விசேஷமில்லாமையாலும் இதரபாஷாகிரந்தங்களினின்றும் சிலவுசிதமானவிஷயங்களைச் சங்கிரஹித்தும் மேற்படி காலத்தில்பிரயோஜனப் படுத்திக்கொள்வது வழக்கம். இப்படிதகுந்தநூல்களின்மை யானது இக்குழாத்தின் விருத்திக்கு ஒருவாறு குறைவாயிருப்பினும் சீக்கிரத்தில்தானே க்குறைநீங்கிதினேதினேசெழித்துத் தழை தோங்கிப் பயனளிக்குமென்பதற்குஇப்போதிற்கிப்போதே சிலவறிகுறிகள் தோன்றுவதால் சந்தேகமில்லையென்று நினைக்கிறேன். இச்சமயத்துக்கேற்றபடிநித்தியானுசந்தானத்திற்காகத் தமிழ்வாசகநடையி லியற்றப்பட்டவோர் ஸ்தோத்திரபாடபுஸ்தகத்தைவேதசாமாஜகரின் உதவியால் இக்கூட்டத்தாரடைந்திருக்கின்றனர். கிரமேண உபநிஷதர்த்தங்களை யொன்றாய்த் திரட்டியச்சிட்ட மற்றோர்புத்தகத்தையும், ஸ்மிருதீதிஹாசாதி கிரந்தங்களினின்றும், வேறுநூல்கள் னின்றும் சேகரிக்கப்பட்ட யுக்தமானபலவிஷயங்களடங்கிய சிலபுத்தகங்களையும் பெறுவரென்றும் நம்புகிறேன். இதைப்பற்றியிச் சுருக்கவிளக்கம் போதாதெனஎனதன்பரில் சிலர் அதிருப்தி யடையக்கூடு மாகையால், போனவெள்ளிக்கிழமை கூடியசபையில் நடந்த கிரமத்தையும், காலக்ஷேப விஷயத்தையும்இதனடியிற்குறிப்பதுசர்வசோதரானந்தகரமாயிருக்குமென்றுநினைக்கிறேன்.அன்றயதினம் இந்நகரிலுள்ள கனவான்களில் சுமார் நூற்றுக்கதிகமாகவே சேர்ந்திருந்தனர்.

முதலிலிக்கூடத்தோர் யாவரும் எழுந்து நிற்க, வேதசமாஜசோதரருக்குள் ஒருவர்இவ்வடியில்வரும் தேவஸ்தோத்திரத்தை வாசித்தனர்.

### ஓம்பரப்ரம்ஹணே நம:.

"சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்திருக,
"மோக்ஷப்ரத,ஸர்வக்கிய, சர்வசக்த, ஆநந்
"தமய,ஸத்ஸ்வரூப, அதிருசிய, ஏக. பரமபு
"ருஷனாகியகடவுளே! நினையன்பாலும்நின்
"பொருட்டுச்செய்யப்படுஞ்சத்கர்மங்களா
"லும் வணங்குகின்றோம்."

"சிருஷ்டிஸ்திதி லயகாரணபூதனாய்,திரி
"லோகவியாபியாய், எம்மனோவியாபாரங்
"களைப்பிரேரேபிக்கின்றஅப்பரமாத்மாவை
"த்தியானிப்போமாக."*

"எவன் யாவற்றையும்விளங்கச்செய்கின்
"றானோ,எவன்எல்லாவற்றையும் ரக்ஷிக்கிறா
"னோ,எவனிடத்தினின்றுயாவும்ஜனிக்கின்ற
"னவோ, எவனிடத்து யாவும் மீண்டுலயி
"க்கின்றனவோ, மோக்ஷத்தின்பொருட்டுந
"மதுமனோவிருத்திசளைச்சன்மார்க்கத்தில்பி
"ரவர்த்திக்கும்படி எவன்உதவுகின்றானோஅ
"ப்படிப்பட்ட திவ்வியசவிதாவினுடைய ப
"ரமபதத்தை மென்மேலும் கொண்டாடித்
"தொழுவோமாக."

"மகானாகியும்அஞ்ஞானத்துக்குப்புறம்ப[ா]கியும்,சூரியனைப்போல் ஜாஜ்வலித்துக்கொ[ண்]டும்இருக்கின்றஇந்தமஹாபுருஷனைத்தி[யா]னமார்க்கத் தாலறிவோமாக; அவனைஇ

---

*"(ஓம். பூர்புவஸ்ஸுவ:. தத்ஸவி
"துர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி
"தியோயோ ந: ப்ரசோதயாத்.)"

“வ்வாறுஅறிந்துகொண்டவன் அமிருதனாகி
“றான். பரமபதப் பிராப்திக்கு வேறுவழியி
“ல்லை.”

“ஓபுருஷோத்தமா! மஹாபுருஷனாகிய உ
“ன்னை ஒருவனையேஎன்றும்மறவாமலுஞ்சி
“ருஷ்டியிலடங்கிய பூதங்களைத் தொழாம
“லுஞ் சத்தியமார்க்கத்தில்தானே பிரவர்த்
“திக்கும்படி கடாக்ஷிப்பாயாக.”

“சர்வ சங்கேத கர்மங்களையும் பரித்திய
“ஜித்து ஏகநாயகனாகிய நின்னை யொருவனை
“யேசரணமடைந்தனம். அடியாரைச்சக
“ல பாபங்களினின்றும் விடுவித்து, அபயம்
“கொடுத்தருள்வாயாக.” ஓம்தத்ஸத்.

அநந்தரம் எல்லோருமுட்கார்ந்தபிறகுவேதசமாஜ காரியதர்சியாகவிருந்த ம-ா-ா- இராஜகோபாலாசாரியா ரவர்களால் அடியில்வருகிறபடி உபநியசிக்கப்பட்டது.

அன்பர்களே! தீயோரை நல்லோராக்கி, நல்லோர்க்கு நற்கதியளிக்கும், மெய்யறிவின்பக்கடவுளானவர், அவருடைய அபரிமித கருணாப்பிரவாகத்தில் ஏகதேசம் நம்மமீது பெருக்கி நம்மவரிற் பலரை யொன்றாய்க்கூட்டி ஒருமித்த மனதுடன் நல்வழியைநாடி நற்பயனையடைய நற்சமயமளித்தபடியால், அச்சமயத்தைக் கைவிடாதுநம்மசக்திக்கியைந்தவரை பயன்படுத்தமுயல்வதுநம்மசுவரூபத்தால் ஆவசியகமாகிறது. நாம் இன்றும் இனியும் இடைவிடாது சோர்வற்று முயன்று அவலம்பிக்கவேண்டிய ஸத்ஸம்பிரதாயமின்னதென்று, ஏற்கனவே இந்நகரை யலங்கரிக்கும் கனவான்களில் சிலர் உபநியாசத்தாலும் அனுஷ்டானத்தாலும் விளக்கியிருக்கின்றனரல்லவா. அவ்விதஸத்ஸம்பிரதாயத்தைஆந்தரியமாய்அனுஷ்டிப்பதனால் அளவற்றநிலையுற்ற, இம்மைமறுமைச் சுகங்கள் கைக்கூடிவருமாகலின்,அந்தஸம்பிரதாயத்தில்நம்மமனது நிலைக்கும்பொருட்டுஅதின்சுவரூபமின்னதென்றும், அதினாலடையக் கூடியபயன்களின்னவையென்றும், அறிந்துகொள்ளவேண்டிய தத்தியாவசியக மாகவிருக்கிறது.

எத்தேசத்திலும்எக்காலத்திலும்எவ்வகை மனிதரும், தம்கடமைகளிலெல்லாம் மிகப்பளுவானதும் சிறந்ததும்தெய்வத்தைத்தொழுதலென்று அறிந்துகொண்டு,அவரவருக்கு ஸாதுவானதென்றும், சாத்தியமானதென்றும்தோன்றியவழிகளால், இக்கடமையைச்செலுத்தி வந்தார்களென்பதனைவர்க்குந்தெரிந்தவிஷயம்.இவற்றுள்அன்னியநாட்டார்அவலம்பித்த வழிகளைக்குறித்துப் பிரகிருதத்தில் பிரஸ்தாபிப்பது அனாவசியக மாகையால், நமது நாட்டிலுள்ளவற்றைமாத்திரம்ஒன்றுடனொன்றை ஒப்பிட்டு, சுவரூபவிசாரம் செய்து தெளிவதேபோதுமென்றெண்ணுகிறேன்.

தொன்றுதொட்டு நம்மபெரியவர்களிடத்து ஞானயோகம், கர்மயோகம், என்கிற இவ்விரண்டுவழிகளே சென்றுவந்தன. அவற்றுள் அக்கினி, சூரியன், முதலியபூதங்கள் மூலமாகச் செய்யப்படும் அக்கினிஷ்டோமம், ஜோதிஷ்டோமம் முதலியவற்றிற்கு கர்மயோகமென்றுபெயர். இவ்வித கர்மங்களால் நாமடையக் கூடிய பயன்களின்னவையென்று நமதனுபவத்தாலறியக் கூடாதாகிலும், சப்தப்பிரமாணங்களிலெல்லாம் சிறந்ததாகிய வேதத்தில் அவற்றிற்கு பலசுருதிகூறி யிருக்கின்றமையால், அவ்விஷயத்தில் நாம்பிரகிருதத்தில் அதிசங்கை செய்ய வேண்டியதில்லை. இந்திராதிதேவதைகளுண்டென்பதையும், நமதுகர்மங்களுக்கியைந்தவாறுஅந்தப்பதவிகள்கிடைக்குமென்பதையும்கேட்கும்பலர்அதைநம்பமாட்டார்கள். அப்பிரத்தியக்ஷமானபதார்த்தங்களைக்குறித்து நாம் விசாரிக்கும்போதுஇன்னதுசம்பாவிதம்இன்னது அசம்பாவியமென்று ஆதாரப்பட்டுச் சொல்வது விவேகத்துக்கு அடுத்தகாரியமன்று. நம்முடைய சுகிருத விசேஷத்தால், உத்தரதசையில் சிறந்தபதவி கிடைக்குமென்பது அசம்பாவிய மாகுமோ. நன்மைதீமைகளையும், அவற்றிற்குப் பயனிப்பிறப்பிலேயேகிடைக்கிறதில்லையென்பதையும்ஒப்புக்கொள்ளும் நாம், அவற்றையடையும்காலம் எதுவென்று கொள்ளவேண்டியது ? அப்பிரத்தியக்ஷ விஷயத்தைக் குறித்து ஒருவிதசித்தாந்தம் செய்வதைவிட, நமக்கொன்றும் தெரியாதென்பது விவேகத்துக் கடுத்த காரியமேயாகிலும், சர்வகௌரவமான வேதத்தில்கூறியவிஷயம் பிசகென்பதற்கு நிஸ்ஸந்தேஹமான பிரத்தியக்ஷபிரமாணமிருந்தாலன்றி, வேறுவித சித்தாந்தம் செய்யாமைநலமல்லவா. ஆகிலும்இந்தக்கர்மங்களைச்செய்யவேண்டியதுஒவ்வொருவருக்கும்விதியென்கிற ஏற்பாடேகிடையாது. கர்மயோகமெல்லாம் ஐச்சிகமானதாகும். இன்னின்னபயனை விரும்புவோர் இன்னின்ன கருமத்தைச்செய்கவென்றுவிதிவந்திருக்குமேயன்றி, சார்வத்திரிகமாக வந்தகாமம் ஒன்றேனுமில்லை. இக்கர்மங்கள் விளைக்கும்பயன்கள்அவ்வளவுசிறந்தனவுமல்ல வாகையால், அவற்றைச் செய்தாலும் செய்யாவிடினும் பாதகமில்லை. ஞானயோகத்தாலடையும் பயனொன்றுமாத்திரமே நிலையுள்ளதாகையால் அனைவரும் முயன்றுஅடையவே

ண்டியது ஞானயோகமேயென்பதற்குப் பிரமாணம் கூறவேண்டிய ஆவசியகமில்லையென்று நினைக்கிறேன். வேதத்தைப் படித்துப் பார்ப்போருக்கு இது வெகுஎளிதில்விளங்கும். அவற்றிற்கு க்கூறிய பலசுருதிகளில், ஞானயோகமொன்றுதவிர மற்றெதகுற்ம் மோக்ஷத்தைப் பலனாயுரைத்திருக்கமாட்டாதென்பதை சுவல்பப் பிரயாசத்தால் காணலாம். முண்டகோபநிஷத்துமுதல்முண்டகம் இரண்டாவ தத்தியாயத்தில் யத்கூ

ரிஃணொநவூ வெஷயஜிராமாக தெநாத-ராஃ கூீணலொகாஶ்வவெ (கர்மங்களைச் செய்பவர் அவற்றில்ஆவல்கொண்ட வர்களாகி, சிறந்தஞானத்தை யடைகின்றதில்லை யாகையால், அர்தக்கர்மங்களின் பயனொழிந்தால் அவர்கள் மறுபடி விழுந்து விடுகிறார்கள்.) என்றுசொல்லியிருக்கிறது. கீதை ஏழாவது அத்தியாயத்தில் வஹூநாம் ஜநநாமெஜெ ஜாநவாநாம் வுவஷுதெ, வாஸுஜெவ ஸவமிதி ஸஹாதா ஸுஜூலஃ. கஜெவ து-லெஃ ஷெஷாம் தநூவத்வூ வெதஸாம், ஜெவாஜெவ யஜொ யாஷிரிஷூ யாஷிராவி. கவ்யக்கூவ்யக்திாவநம் உநவெஜோ உவெ-ஜயஃ, வரஃஹாவ உஜாநஜொ உராவ்யபூத்உ. நாஹஃவுகா ஶஸவ-‌ஸ்யொஜியா ஸா வூதஃ, உ-ஞொ யம் நாஹிஜாநாதிலொகொாஜவ்யம்.(எண்ணரிய ஜன்மங்களெடுத்த போதிலும், கடைசியில் ஞானமுடையவன் மாத்திரம்என்னை அடைகிறான். வாசுதேவனே சகலமும்; அந்த மஹாத்மாவை அடைதல் கடினம் என்று அறிந்தவனே அந்த ஞானமுடையவன். புத்திகுன்றியவர் செய்யும் கர்மங்களால் அவர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் முடிவுள்ளனவேயாம். தேவர்முதலிய வரைத் தொழுவோர்அத்தேவர்முதலியவர்களையேஅடைவார்.என்னைத்தொழுவோர் மாத்திரமே என்னையடைவார்கள். அவ்வியயமானவும் சிரேஷ்டமானவும்என் சுவபாவத்தைஅறியாதமூடர்கள் இந்திரியங்களுக்கு ப்புலப் படமாட்டாத என்னைருபமுள்ளவனாக நினைக்கிறார்கள். யோகமாயையால் சூழப்பட்டிருக்கும் நான் எல்லோருக்கும் விளங்குகிறதில்லை. நான்பிறப்பும் இறப்புமற்றவனென்று யாரறியவில்லையோ அவன்மூடனே) என்று சொல்லியிருக்கிறது. இது மாத்திரமேயன்று மனுஸ்மிருதி பன்னிரண்டாவதத்தியாயத்தில் யமொக்தாநு விகவாணி வரிஹாயுூரிஜொதஃ, ஆூத்ஜூாநெயவெ வஸ்ராக வெஷாஹ்யாஸெவ்ய தநவாநு (த்விஜசிரேஷ்டன் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை யெல்லாம் விட்டொழித்தாலும் ஒழிக்கலாம். பிரும்மஞானத்திலும், சமோகுணத்திலும், வேதாப்பியாசத்திலும் மாத்திரம் அவசியம்முயலவேண்டும் என்று சொல்லியிருக் கிறது. வாஜஸநேய உபநிஷத்தில் இஹஹெவஷ வெதீஷய ஸத்யஹஸிந வெதிஹஹெதீநஹூதீவிநஷ்டிஃ ஹூஹெதஷு ஹூஹெதஷுவி விதுயீராஃ வெுதுூஸாலொகாஷூதா ஹவஜி. (இப்பிறப்பிலே பிரும்மசுவரூபத்தை யறிந்துகொண்டால்நிலையுள்ள சுகம் கிடைக்கும்; இப்பிறப்பில் அறியாவிட்டால் பெருந்துன்ப முண்டாகும். பூதங்கள்தோறும் பிரும்மத்தைக் காண்கிறதீரர்கள் இவ்வுலகத்தைவிட்ட பிறகு நித்திய சுகமடைகின்றனர்)என்று விதித்திருக்கிறது.

கடைசியாக இந்தயுகத்துக்கு விதிக்க அதிகாரமுடைய பராசரருடைய நிபந்தனையினால், இந்தக்கர்மயோகத்தைச் சேர்ந்ததொழில்கள் பெரும்பாலும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றனமையால் அதைக்குறித்து விசேஷமாய்ப் பிரஸ்தாபிக்கவேண்டிய தாவசியகமன்று. கஶாமெஃஹஃமவாமெஃஹஃ ஸந்யாஸம் வலெஷெவெதுகஃ, ஜெவ ரெணஸுதொத்திஃ கலெளவஞ்சுவிவஜூயெக. (இக்கலியுகத்தில் அசுவமேதம், கோமேதம், சனியாசம், சிராத்தத்தில் மாம்சபோஜனம், மைத்துனனைக்கொண்டுபிள்ளைபெற்றுக்கொள்ளுதல் ஆகிய இவ்வைந்தையும் வர்ஜிக்க வேண்டியது) என்று சொல்லி யிருக்கிறார். இந்தவிதியினால் ஜீவஹிம்ஸைக்கு ஹேதுவானகர்மங்களெல்லாம் விலக்கப்பட்டன.

இவ்வாறு கர்மயோகத்துக்கும்ஞானயோகத்துக்கு முள்ளபல தாரதம்மியங்களைக்குறித்துப்பிரஸ்தாபித்தபிறகு இனிஞானயோகத்தைக்குறித்து சிலவார்த்தைகளைச் சொல்லுகிறேன், பகவத்ஸ்வரூப மின்னதென்றும்

மற்றஜீவஜடங்களுடைய சுவரூபமின்னதென்றும் அறிந்துகொள்வதுமாத்திரமேஞான யோகமென்று மலைக்கவேண்டாம். அந்தசுவரூப ஞானத்தோடு, அவற்றால் நம்மமீது பொருந்துங்கடமைகளின்னவையென்றும், அவற்றைச்செலுத்து மார்க்கங்களின்னவையென்றும் அறிந்துகொண்டு, அவற்றைத்தாமும் சோர்வின்றியனுஷ்டித்துப், பிறர்க்கும் பிரவசனம்செய்தாலொழிய ஞானயோகத்துக்குப் பரிபூர்த்தியில்லை. பரமாத்மசுவரூபத்தைச் சரியாய் வர்ணிக்கவேதத்தாலே முடியவில்லையெனில் என்னால் இலக்கணங் கூறிமுடியுமோ,

௧. மநஸைவேதமாப்தவ்யம் நேஹ நாநாஸ்தி கிஞ்சந; ம்ருத்யோஸ் ஸ ம்ருத்யும் கச்சதி ய இஹ நாநேவ பஸ்யதி (மனதினால்மாத்திரமே பிரமனை யெட்டக்கூடும். அவனை யறியப் பலவழிகளில்லை. பலவழிகளிருப்பதாய் மலைப்பவர் மரணத்தினின்றும் மரணத்துக்குச் செல்லுகிறார்கள்.)

௨. யஸ்யாமதம் தஸ்ய மதம், மதம்யஸ்ய நவேதஸ:. அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம். ப்ரதிபோதவிதிதம்மதம் அம்ருதத்வம்ஹிவிந்ததே (பிரும்மசுவரூபத்தை நன்றாயறிவேனென்பவன் முற்றுமறியான், அறியேனென்பவன் அறிவான். பிரும்மம் தெரியுமென்பவர்களுக்குத் தெரியாது, தெரியாதென்பவர்களுக்குத்தெரியும். மனதினால் அறியத்தக்கதென்று அறிபவன் அமிருதனாவான்.

௩. ப்ருஹச்ச தத்திவ்யமசிந்த்யரூபம், ஸூக்ஷ்மாச்ச தத்ஸூக்ஷ்மதரம் விபாதி, தூராத்ஸுதூரே ததிஹாந்திகே ச பஸ்யத்ஸ்விஹைவ நிஹிதம்குஹாயாம்.

(அது(பிரம்மம்)பெரிதாயும், திவியமாயும், சூக்ஷமத்திலும் வெகுசூக்ஷமமாயும், பலவிதமாய் விளங்குகின்றது. இதுதியானமற்றவர்களுக்கு வெகுதூரத்திலிருக்கினும் தியானிப்பவருக்கு தூரமற்றிருக்கின்றது. தியானமார்க்கத்தால் காண்போருக்கு இவ்விடத்திலேயேஹிருதயகுஹையில்விளங்குகிறது.)

௪. யத்ததத்ரேஸ்யமக்ராஹ்யமகோத்ரமவர்ணமசக்ஷு:ஸ்ரோத்ரம், ததபாணிபாதம் நித்யம்விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம், ததவ்யயம் யத்பூதயோநிம் பரிபஸ்யந்தி தீரா:. (அது(பிரம்மம்) கண்ணுக்குவிளங்காதது, கிரகிக்கக்கூடாதது, அடியற்றது, வர்ணமற்றது, கண்காதில்லாதது, கைகாலில்லாதது நித்தியமானது, விபுஸ்வரூபி, எங்கும்பரவியது, சூக்ஷமமானது, அழிவற்றது, அதைச்சான்றோர் பூதங்களுக்கெல்லாம் ஆதிகாரணமென்று நன்றாயறிகிறார்கள்.)

௫. நைநமூர்த்வம் நதிர்யஞ்சம் நமத்யே பரிஜக்ரபத், நதஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்யஸ:. (அவனுடைய உயரத்தையாவது, அகலத்தையாவது இடையையாவது ஒருவரும் கண்டறியார். மஹாயஸஸ்வியென்னும் பெயருடைய அவனுக்குப் பிரதிமையில்லை.)

௬. அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா பஸ்யத்யசக்ஷு: ஸ ஸ்ருணோத்யகர்ண:, ஸ வேத்தி வேத்யம் நச தஸ்யாஸ்தி வேத்தா தமாஹுரக்ர்யம் புருஷம் மஹாந்தம்.

(அவன்கையின்றி கிரகிப்பவன், காலின்றி நடப்பவன், கண்ணின்றிகாண்பவன், காதின்றிகேட்பவன், அறியத்தக்கனவெல்லாம் அவனறிவான், அவனைமுழுமையும் அறியவோ ஒருவருமில்லை. அவனுக்கு வேறுவிதமாய் லக்ஷணம்கூறி முடியாமையால் அவனையாதிமஹா புருஷனென்றார்கள்.)

அளவுமிதமின்றி சுருதிகளையெடுத்து உதஹரிக்க ஆவசியக்முமில்லை அவகாசமுமில்லையாகையால் இவ்வளவுடன் முடிக்கிறேன். இந்தசுருதிவாக்கியங்களால் பரமாத்மாவானவர் நமது கண் வாய் முதலிய பொறிகளுக்குப் புலப்படாமல், சகல பொருள்களிலும் மறைந்திருந்து, முக்காலத்தையும் மனதிற்கொண்டு, நன்மையேகோரி, கருணையேபொழிந்து, சிந்தையும்சாதனமுமின்றி, வேலையும் ஒய்வுமற்று, விவித விசித்திர விநோதங்களை விளைத்துக்கொண்டிருக்கிறாரென்றேற்படுகிறதல்லவா? ஜீவசுவரூபத்தை வி

சாரிக்குங்கால் அதற்கும் பரமாத்மாவுக்கும் ஒருவிதத்தில் ஸாமியமும் மற்றொரு விதத்தில் பேதமும் விளங்கும். பரமாத்மாவை யலங்கரிக்கும் சகலவித கலியாணகுணங்களிலும் ஏகதேசம் ஜீவனிடத்தில்காணப்படுவதால்ஸாமியம்விளங்கித்து. கடவுளிடத்தில்கடல் மடை திறந்தவாறுகரைபுரண்டுஅளவிறந்து பிரவஹிக்கும்இக்குணங்களுடைய கணங்கள்மனிதரிடத்துஅளவுபரிமாணமுள்ளனவாயிருக்கின்றமையால்பேதமும்விளங்கும். இத்தன்மையான சுவரூபத்தையுடைய நாம் பரமாத்மாவைத் தொழுதேற்றும் வழியென்னவென்னில், காலையில் நமது சக்திக்கியைந்தவரை அவருடைய மஹிமையைத் திருகரணசுத்தியுடன் கொண்டாடி, நம்ம மனோவாக்காயங்களை நல்வழியிற் செலுத்தவென வணங்கி வேண்டி நம்முடைய சரிதையிலெல்லாம் பயபக்தியுடன் தீமையைக்கடிந்து நன்மையைநாடி, மாலையில் அவர் நமக்கன்றளித்தநன்மைகட்காக அவரை உள்ளுறவாழ்த்திப், பிழைகளெல்லாம் பொறுக்கவென கசிந்துருகி அனுதாபப்படுவதே அவர்விரும்பும் பூஜையாம். நம்முடைய சரிதைகளின் சுவரூபம் தெரியாமையால் கொடியபாவங்கள் விளையுமாகையால், சுவபாவதர்மங்களைத்தவறாது அனுஷ்டித்தலும், அவற்றிற்கு பாதகமாயிராத சாங்கேதக தர்மங்களைக்கண்டவிடத்து கடியாமையுமே நம்மகடமைகளாம். பொய்யாமை, கள்ளாமை, புறங்கூறாமை, பொறுமை, வாய்மை, முதலியவற்றைக்காத்து, ஈன்றவரை ஜீவகோடிகளுக் குபகரிப்பதே நமக்குரிய சுவபாவதர்மங்களாம். இவற்றையொருவரும் எப்போதும் கைவிடக்கூடாது. சாங்கேதிகதர்மங்கள் நாடுதோறும், ஊர்தோறும் குடும்பங்கள்தோறும்வெவ்வேறாயிருக்குமாகையால் அவைசாமானியதர்மங்களுக்கு விரோதமா யிருக்கின்றனவா இல்லையாவென்பதை முதலில் யோசிக்கவேண்டும். சாமானியதர்மங்களுக்கு விரோதமாகில் அவற்றைசர்வப்பிரயத்தினத்தாலும் விட்டொழிக்கவேண்டும். தானுண்ணும் முன் எந்த ஹேதுவைப்பற்றியும் சூத்திருக்கு அன்னமிடக்கூடாதென்று பிராம்மண சாமானியமும், முக்கியமாய் வைஷ்ணவரும்வைத்துக்கொண்டிருக்கும்சங்கேதம்முற்றும்அனாவசியகமாயிருப்பதுமன்றி, ஜீவகாருணியமே சர்வ தர்மங்களிலும் சிறந்ததென்கிற சாமானிய நியமத்திற்குப் பலவிசை விரோதமாய் முடியுமென்பதை நிரூபிக்கவேண்டிய ஆவசியகமில்லையென்றுநம்புகிறேன். ஒருவிதத்திலும் பாதகமில்லாத சங்கேதங்கள் பலவுண்டு. முதல் அன்னம்ப்ரிமாறி பிறகு வியஞ்சனம் பரிமாறவேண்டுமென நம்மவரில் சிலர் கொள்கையும், வியஞ்சனமெல்லாம் பரிமாறினபிறகே அன்னம் பரிமாறவேண்டுமென சிலர் கொள்கையும் நம்மவரில் ஏற்பட்டிருப்பது அனைவர்க்குந் தெரியுமே. இத்தன்மையான அனேகவிஷயங்களில் அவரவர்க்கு ருசிக்கிறவாறு செய்துகொள்வதில் பழுதில்லையாகிலும், பிறர்தம்மைப்போலவே அனுஷ்டிக்கவில்லையென்று நிந்திப்பது பழுதாம். சாதாரணமாக இவ்விஷயங்களில்மாத்திரமேயன்றி சகலவிஷயங்களிலும்நாம்கிரோதத்தைக்கைவிட்டுக்ஷமையைப் பாராட்டவேண்டும். முக்கியமாகமதவிஷயங்களில் பழுதானகொள்கையுடைய வர்களுக்கு சாத்தியமானவரையில்நல்வார்த்தையால் உண்மையைவிளக்கவேண்டும். நமது சொல்லையவர்கள் கேளாவிடில் அவர்களைக் கண்டு நாம் பச்சாத்தாபப் படவேண்டியதேயன்றி, கிரோதப்படுவது தர்மமன்று. தமது கொள்கையே சரியானதென்றுஆந்தரியமாய் நம்புவோர், நமது கொள்கையை ஆதரிக்கவில்லையென்று வியசனப்படுவது சரியுமல்ல, பயனும்தராது. உள்ளுறதமதுகொள்கை பழுதென்றறிந்தவர்கள்கூட அனேக லௌகிகஹேதுக்களால் அதைவிட்டொழிக்கவாவது, சரியானகொள்கையை அவலம்பிக்கவாவது மாட்டாவிடில், அவர்களை இகழ்வதும் தர்மமல்ல; தீமைபுரிவோர்க்குசிக்ஷையளிப்பது கடவுளைப் பொருத்ததாம். எவ்வகையோருக்கும் நன்மைசெய்வது மாத்திரமேநமக்குதர்மமாகும். நமதுகொள்கைப்பழுதானதென்று வீணுக்கு நிந்திப்போரையும் நாம் நிந்திக்கலாகாது. அவர்களுடையநிந்தை நிராதாரமானதெனில், அந்தநிந்தையின் சுவரூபத்தைமாத்திரம் வெளியிடுவது தர்மமாகுமேயன்றி, வியக்திதூஷணம் செய்வது சரியன்று. இவ்விஷயத்தை எவ்வளவு சுருக்கிச் சொன்னாலும் இன்று முடியாதாகையால், அதிகமாய் வளர்த்த வெனக்குமனமில்லை.

இவ்வளவு கடினமான தர்மங்களை நேராய் அறிந்து ஆசரிப்பது எல்லோர்க்கும் சுலபசாத்திய மல்லவாகையால் ஆதியில் பக்திமார்க்கமென்றும், பிரபத்திமார்க்கமென்றும், இரண்டுவழிகளேற்பட்டன. இவற்றுள், நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, அவற்றிற்கியைந்தபடி வழுவாமல்நடந்து, கடவுளைத்தொழவல்ல தீரர்கள் பக்திமார்க்கத்தையவலம்பித்தனர். இல்வாறு செய்ய சக்தியில்லாதவர் ஒரு ஆசாரியனையடைந்து அவர்மூலமாய்த் தெளிந்து பேறுபெறமுயன்றனர். காலத்தால் எவ்விதஏற்பாடும் பழுதுறுவது

போலவே இவ்வழிகளும் சீரழிந்தவிதத்தைச்சற்று விவரிக்கிறேன். இவற்றை ஜீவனத்துக்கு உதவியாகச் செய்துகொண்ட சிலர் பக்திமார்க்கம் இக்காலத்தில் சாத்தியமல்லவென்றும், பிரபத்தியொன்றேஅனைவர்க்கும் நல்வழியென்றும் நிஷ்கர்ஷித்து, அந்தபபிரபத்தியை வெகுவிநோதமாய் அனுஷ்டிக்கத்தொடங்கினர். பூர்வத்தில் பலவருஷகாலம் ஆசாரியரிடத்தில் குருகுலவாசம் செய்து உபதேசங்களைப் பெற்றும், ஆசாரியருடைய சரிதைகளைக் கவனித்தும், நல்வழிகளையறிந்து, அவற்றிற்பழகி சுவந்தமுயற்சியினால் பேறுபெற்றுவந்தனர். பிரகிருதத்திலோவெனில், ஒருவன் பிறந்ததுமுதல் உயிரளவும் நீசமார்க்கங்களை யனுஷ்டித்துவிட்டு அந்தியமதசையில், அந்தந்தகிளாசுபிரபத்திக்குஏற்பட்டிருக்கும் வரியைமாத்திரம் உண்டியல் செய்து ஆசாரியரிட மனுப்பிவிட்டால், அவ்வாசாரியன் வியக்திகவுரவத்துக் கிணைந்தவாறு சாதாரண தபாலிலாவது தந்திதபாலிலாவது பிரபத்தியை ரெஜிஸ்டர் செய்தனுப்பிவிடுகிறார். இந்த ராதாரியினால் நாம் முக்தியடைந்துவிடுவதுநிச்சயமென்று நாம் திரவிய விரயம் செய்வது மாத்திரமேயன்றி, நடத்தையை த்திருத்திக்கொள்ளாமல், மதம்பிடித்துத் திரிகின்றோம். ஆசாரியனுக்கு அளவிறந்த பொருளளிப்பதினாலாவது, அவர்நம்மைத்தட்டிக் கொடுப்பதினாலாவது, கடவுள் நமதுபாபங்களை மன்னித்துவிடுவரென்று மலைக்கவேண்டாம். நற்கதிக்குக் காரணம் நமதுநற்செயலொன்றேயாகையால், தர்மக்கியானத்தை சுவயமாயும் அன்புகூர்ந் துரைப்போர் சகாயத்தாலும்அறிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டியது நமக்கு நீங்கலாக்கடமையாகும்.

தனியாயக்கடவுளைத் தொழுவதற்கும், பலர்கூடிவாழ்த்துவதற்கும்,பேதமுண்டாவெனில், மறுமைப்பயன்களை யடையும் விஷயத்தில் விசேஷபேதமில்லை. ஆகிலும் பலர்கூடிக்கடவுளை வாழ்த்துவதால் அனேகலவுகிகப் பிரயோஜனங்களுண்டு. அவற்றுள் முதன்மையான தென்னவெனில் கொள்கையிலும் ஆசாரத்திலும் ஜனிக்கும் ஐகமத்தியமும், சிநேஹமும், காருணியமேயாம். இதினால்விளையும் அளவற்றபயன்களைக்குறித்து இப்போது சங்கிரகமாய்ச்சொல்ல எனக்குமனமில்லையாகையால், நமதப்பனிரங்கி மற்றொரு சமயமளிப்பாரெனில், அப்போதுஅதை விஸ்தாரமாய் உபநியசிக்கக்கருதி யிருக்கிறேன்.

இவ்வாறு ஆதிமுதல் நமது நாட்டையலங்கரித்த சீரான வேற்பாடுகள்பலஉண்டாயிருந்தும், நமது தவுர்பாக்கிய வசத்தாலோ நாம்செய்த பாவத்தின் கொடுமையாலோ, மற்றெந்த ஹேதுவைப்பற்றியோ அவற்றையெல்லாம் ஒழித்ததுமாத்திரமேயன்றி, மெய்மனம் நடுங்காமல் கொடிய பகவந்நிக்கிரகத்துக்கு ஆளாகி, அர்ச்சையென்னும் பாவத் தொழிலைத் தொடங்கினோம். இவ்விஷயத்தைக்குறித்து, எங்கள்சமாஜத்தார் தனியாய் ஒரு கிரந்தமெழுதியிருக்கிறபடியாலும், இச்சமயத்தில் உத்ஸாகமடைவதற்குப்பதில் வியசனத்தோடு பிரிய எனக்கு மனமில்லையாகையாலும், அதைவளர்த்திக் கூறுமல் முடிக்கிறேன்.

கடைசியாகக் கைம்மாறு விரும்பாது கருணையைப்பொழிகின்ற, ஞானதேஜஸையே தேகமாகவுடைய பேருளாளனது கிருபாகடாக்ஷத்தினால் நமதுநட்பும் ஐகமத்தியமும் நாள்தோறும்பெருகி, நன்மனதுடன் நல்வினையில் முயன்று, கீர்த்தியையும் சுகத்தையுமடைந்து, ஓய்வின்றி அவ்வள்ளலை வாழ்த்திக்கொள்ள பலவாண்டு வாழ்வோமாக. நமது முயற்சிக்குப் பயனளிக்கும் கர்த்தனது மனந் தாழாதிருப்பதாக. இச்சபையும் இதைப்போல் இனி யுண்டாகும்சபைகளும், அவ்வள்ளலைப்போலவே நித்தியமாக வாழ்வதாக.

---

இஃதான பின்பு முடிவாகமீண்டும்பகவான்பொருட்டு அடியிற் காணும்ஸ்துதி வாசிக்கப்பட்டது.

## ஓம்பரவ்ரூம்ஹணே நமஃ.

ஹே ? தேஜோமயா? ஸர்வபூதமனோஹரா? ஜகத்ரக்ஷகா !

உனது கடாக்ஷமும் அன்பும் ஸர்வத்திலும் வியாபித்திருக்கின்றது. அல்லும்பகலும் எம்மைவருத்துகிற எல்லாத்துன்பங்களுக்கும் ஹேதுவாகிய ஆசாபாசங்களும் லோககர்மங்களும் எங்களையணுகாமல் எமது மாநசங்களாகிய அன்னங்கள் உனது பாதாரவிந்தங்களிலேயே வசிக்கும்படி கிருபைசெய்வாய். எங்கள் சித்தவிருத்திஎல்லாம் விஷயவாஞ்சையில் செல்லாமல் மனோவாக்குகளுக் கெட்டாததாயும் மஹத்தாயுமிருக்கிற உனது மஹநீயரூபத்துள் லயமாகும்படி அநுக்கிரகிப்பாய். உன்னுடைய நித்தியநிர்மல ஆநந்தஸ்வரூபத்தை யாங்கள் தரிசிக்கும்படி சுஞ்ஞான நேத்திரங்களையும் பிரசாதித்தருள்வாய். எம்மெண்ணமுஞ் செய்கையும் நினது கருணாரச பானநிமித்தமாகவே

இருக்கவென்று அருள்வாய். நாங்களிப்போதனுபவிக்கிற உலகஇன்பங்கள் யாவும் அநித்தியம். ஆகையால் நித்தியனும், ஆதியந்தரகிதனும், சரணாகதபோஷகனும் வீற்றிருக்கிறநீ இன்னும்எங்களை இவ்வுலத்துன்பங்களாகிய வெயிலில்தபித்துவருந்தவிடாமல் உனது கருணாகடாக்ஷவீக்ஷணச்சாயையில் சிறிதிடங்கொடுத்து விடாய்தீர்த்து ரக்ஷிப்பாய் ஸ்வாமி. கல்லும் கரடும் முள்ளும் நிறைந்த இவ்வுலக நெறியினின்றும் எம்மை நின்பக்தியாகிற நல்வழியில் காமக்கிரோதலோபமோஹாதி துஷ்டமிருகங்கள் தடுக்காமல்காத்து நினது பாதாரவிந்தங்களாகிய வீட்டைச் சேரநடத்திக்கொண்டுபோவாய். கவலையாலும் துன்பத்தாலும் பூரிக்கப்பட்டிருக்கிற எம்மனது சிறிதுநேரமாயினும் நின்னைத்தியானித்துச்சந்தோஷமடையும்படியனுக்கிரகிப்பாய். எமதுஅஞ்ஞானஇருளைப்போக்கும்மெய்ஞ்ஞானபேரொளியே எமக்குள்ளே அந்நியோந்நியத்தையும்பரஸ்பரநேயத்தையும் பெருக்கி உண்மையோடு கலந்துவாழ உறுதியுள்ளமனமருள்வாய். உனது திருவுள்ளத்துக்கிசைந்த நன்மைகளையே யாங்கள்பாராட்டி பரஸ்பர உபகாரிகளாய்ப் பிரவர்த்திக்க அனுக்கிரகிப்பாய். எங்கள்வாழ்நாள் முழுதும் திருப்புகழ்செப்பும் நினது திருக்கைங்கரியத்தில் தானேசெலுத்தி நித்தியமான பரலோகசுகத்தையே பெறுவதற்கு வேண்டியஉபகரணங்களைத் தேடவருள்வாய். எக்காலத்திலும் எம்மை உனது சந்நிதியிலேயே யிருத்திபொய், பழி, பாவம்ஒன்றும்அணுகாது அடியார்களது அன்புகுன்றுதசெழித்தோங்கும்படி கடாக்ஷிப்பாயாக. ஓம்தத்ஸத்.

இங்ஙனமேபிரதிவாரமும் நடந்தேறிவரினும் ஜனபாஹுள்ளியக் குறைவால் இஃதுபிரகிருதத்தில் சற்றுதாழ்ந்த நிலையிலிருக்கின்றது. இதற்கு முக்கியமாய், உண்மையறிந்தவர்க்கு கூடதம்மில் வேரூன்றிநிற்கிற துரபிமானமும், பழக்கமும் நீக்குவது அசாத்தியமாகவிருப்பதும், இங்கிலீஷ்முதலியஅந்நியபர்ஷைகளிலுள்ள நூல்களையே விரும்பிக்கற்று தமது குலவித்தைகளில் பெரும்பாலும் பிரீதிவைத்து அதையுணரவிரும்பாமல் ஆத்ம உஜ்ஜீவனத்திற்காக பலர் பலவிதமாய்ச் சொல்லுகின்றனர், என்று அவ்வபிமதங்களில் யாதொன்றிலும் நம்பிக்கைவைக்காமலும், அவற்றில் எதுதான் உண்மையென்று சோதித்தறியநினையாமலும், சிலர் அசிரத்தராயும், சந்தேகமனஸ்கராயு மிருப்பதும், காரணங்களா யிருக்கின்றன. ஆயினும் பகவான் இக்குறையை வெகுநாள்வைத்திருக்கமாட் டாரென வுறுதியாய் நம்புகின்றனன்.

| | |
|---|---|
| அக்டோபர் ௴<br>சேலம். | இங்ஙனம்<br>சத்தியகாமி. |

## சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மறுமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

சென்னை, வீராசாமி நாய்க்கர்.............. க
உசூர், சுப்பையர்.................................. க
கள்ளிக்கோட்டை, சங்கரன் நாயர்... ...க
திருப்பூர், அடைக்கலம் பிள்ளை............க

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.